**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், குளித்தலை**
**அசல் வழக்கு எண் – 209/2006**

**வாதி தரப்பு சாட்சி–3 சுப்பிரமணி –** திருமதி.எஸ்.கோமதி பெஞ்ச் கிளார்க் அவர்களால் 44/1969 வது பிரிவின் கீழ் பிரமாணம் செய்யப்பட்டு 11.02.2026 ம் தேதியில் வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது.

**18 முதல் 25 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்குவிசாரணை**

1) நான் வையாளிமடை கிராமத்தை சேர்ந்தவன். எனது ஊருக்கும், தாவா சொத்திற்கும் எவ்வளவு துாரம் என்றால், சுமார் 1000 அடி துாரம் இருக்கும். எனது தோட்டமும், தாவா சொத்தும் ஒரே பொழியில் உள்ளது. நான் கொடுத்த முதல் விசாரணையில் என்ன எழுதியிருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. எனக்கு எந்த கிராமத்தில் சொத்து உள்ளது என்றால், கீழப்பகுதி கிராமத்தில் உள்ளது. அதன் சர்வே எண் 601 ஆகும். பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. எனது நிலத்திற்கான ஆவணம் ஏதாவது தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். எனது மாமனாருக்கு உள்ள சொத்தின் சர்வே எண் என்னவென்றால், அதன் சர்வே எண்ணும் 601 தான். எனது மாமனார் சொத்தை எந்த வருடம் குத்தகைக்கு விட்டார் என்றால் வருடம் தெரியாது. பொன்னம்பலம் என்பவருக்கு குத்தகைக்கு விட்டார்.

2) எந்த வருடம் குத்தகையை மீட்டார் என்றால் சுமார் 30 வருடம் இருக்கும். அதற்கான ஆதாரம் எதாவது உள்ளதா என்றால் இல்லை. ஆவணம் எதுவும் இல்லாமல் நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சகோதரி எந்த வருடம் விடுதலை ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால், சுமார் 3, 4 வருடம் இருக்கும். குழந்தைவேல் கவுண்டர் நிலத்திற்கு தெற்கு, வையாபுரி நிலத்திற்கு மேற்கு, தாவா சொத்திற்கு வடக்கு, கிழக்கில் வெள்ளாளர் என்பவர் நிலம் உள்ளது. தாவா சொத்து வாதிகளுக்கு பாத்தியப்பட்டது என எதன் அடிப்படையில் சொல்கிறேன் என்றால், ஆரம்பம் முதல் அவர்கள் அனுபவித்து வருவதன் அடிப்படையில் சொல்கிறேன். தாவா

சொத்தின் சர்வே எண் என்னவென்றால், சர்வே எண் 598 ஆகும். தாவா சொத்து ஆரம்பத்தில் ஜமீன்தார் வசம் இருந்ததா என்றால் அதுபற்றி தெரியாது. மதார் உசேனுக்கு எந்த வகையில் பாத்தியம் என்றால், கிரையம் வாங்கியதாக சொன்னார்கள், எனக்கு நேரடியாக தெரியாது. எனது சாட்சிய வாக்குமூலத்தில் ஏலம் எடுத்த விபரம் பற்றி கூறியுள்ளேன், அதுபற்றி தெரியுமா என்றால் தெரியாது.

3) மதார் உசேன் வாதிகளின் தகப்பனாருக்கு எந்த வருடம் கிரையம் செய்து கொடுத்தார் என்றால் அதுபற்றி தெரியாது. தாவா சொத்தின் ஆவணங்கள் பற்றி தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் கிரையம் வாங்கியதாக சொல்லும் நிலத்தின் சர்வே எண் என்னவென்றால் சர்வே எண் 598 ஆகும். கிரைய ஆவணத்தை பார்த்தேனா என்றால் இல்லை. அழகர்சாமி, ராமசாமி ஆகியோர் ஒரு மாதத்திற்கு முன்பு இறந்த கிருஷ்ணன் ஆகியோர் எனக்கு உறவுக்காரர்களா என்றால் ஆமாம். தாவா சொத்திற்கு அழகர்சாமி, ராமசாமி,லக்கன் ஆகியோர் பெயருக்கு பட்டா உள்ள விபரம் தெரியுமா என்றால், பட்டா இருப்பதாக சொன்னார்கள். பிரதிவாதிகள்தான் தாவா சொத்தை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. ஆரம்பம் முதல் வாதிகள்தான் அனுபவித்து வருகிறார்கள். தாவா சொத்தை பிரதிவாதிகள்தான் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல.

4) வாதிகள் கிரையம் பெற்ற நிலம் வேறு என்றால் சரியல்ல. வாதிகளுக்கு தாவா சொத்தில் எவ்வித உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்தைப்பற்றி எனக்கு எந்த விபரமும் தெரியாமல் வாதிக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி குடும்பத்தார்தான் அனுபவித்து வருகின்றனர். எனது தகப்பனார் அந்த நிலத்தில் உழவு ஓட்ட செல்வார். என்னை சாட்சியம் அளிக்க யார் அழைத்து வந்தது என்றால் 1ம் வாதிதான் அழைத்து வந்தார். தாவா சொத்தில் நான் ஏதாவது தற்போது சாகுபடி செய்துள்ளேனா என்றால் இல்லை. எனது ஆடு, மாடுகள் தாவா சொத்தில்தான்

மேய்க்கப்படுகிறதா என்றால் ஊரில் உள்ள அனைத்து ஆடு, மாடுகளும் அங்குதான் மேயும். தாவா சொத்திற்கு அருகில் எனக்கு நிலமே இல்லை என்றால் சரியல்ல. நான் வாதியின் நிலத்தில் ஆடு, மாடுகள் மேய்த்து சாகுபடி செய்து வருகிறேன் என்றும், எனவே வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Taken down by me in open court read over interpreted in the witness and acknowledged by him /her to be correct.

Sd/-R. தமிழரசி
**Principal District Munsif,**
**Kulithalai.**